# பிற்காலச் சோழர்களின் செப்பேடுகளும் பார்ப்பனர்களுக்கான தானங்களும்


## எழுத்தாளர் ஞான. வள்ளுவன்





**கட்டுரைச் சுருக்கம்:**

விசயாலய சோழன், ஆதித்த சோழன் தொடக்கமான பிற்காலச் சோழர்களின் ஆட்சியில், ஏற்கனவே தமிழ்நாட்டில் வாழ்ந்துவந்த பிராமணர்கள் போக, அயல்நாட்டுப் பிராமணர்களை ஆயிரக்கணக்கில் இறக்குமதி செய்து, கோயில்களிலும், மடங்களிலும், கல்விநிறுவனங்களிலும் அவர்களை அருச்சகர்களாகவும், புரோகிதர்களாகவும், வேத பாராயணம் செய்வோராகவும் ஆங்காங்கு அமர்த்தப்பட்டனர். சோழ மன்னர்கள், புதிதாகக் குடிபுகுந்த பிராமணர்களுக்குப் பொருளையும், குடியுரிமைகளையும் வாரி வழங்கினர்.

கோயில்கள் இருந்த அனைத்து இடங்களிலும், மடங்களிலும் 'பிராமண போஜனம்' எனப்படும் பார்ப்பனர்களுக்கு அன்றாடம் உணவளிக்கும் திட்டங்களும் 'புண்ணிய காரியம்' என்று சொல்லப்பட்டதால் அரசர்களும், அவர்கள் குடும்பத்தாரும் தலைமேற்கொண்டு நிறைவேற்றினர்.

யாகங்களை அரசர்கள் செய்யவேண்டும், அப்படிச் செய்யாது விடின் நாட்டுக்கும், அரசனுக்கும் கேடு விளையும் என்று பார்ப்பனர்களால் சொல்லப்பட்டது. அவ்வாறு செய்யும் போது 16 விதமான (சோடச) மகா தானங்களைச் செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அவற்றுள் துலாபுருஷ தானம் (எடைக்கு எடை தங்கம் அளித்தல்), ஹிரண்ய கர்ப்பம் (பெரும் தங்கக் கலத்துள் இறங்கி வெளிவந்து அக்கலத்தையே தானம் அளித்தல்) என்னும் இரண்டு தானங்களும் சிறப்பாகச் சொல்லப்பட்டன.

பிராமணருக்குத் தனி நிலங்களும், முழுமுழுக் கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அக்கிராமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம், பிரமதேயம் எனப்பல பெயர்களில் வழங்கின. இக் குடியிருப்புகள் அனைத்தும் பிராமணர்களின் நிருவாகத்திற்கே விடப்பட்டன. அரசனுடைய ஆணைகள் அவற்றினுள் செயல்படா. அக் கிராமங்களுக்கு எல்லாவிதமான வரிகள், கட்டணங்கள், கடமைகள், ஆயங்கள் முதலியவற்றினின்றும் முழுவிலக்கு அளிக்கப்பட்டுக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டன.

வேளாண் மக்களிடமிருந்து விளைநிலங்களைப் பறித்து, பார்ப்பனர்களுக்குத் தானமாகக் கொடுத்தார்கள் என்பதும், விவசாயம் சாஸ்திர விரோதமாக இருந்தும் விளைநிலங்களைக் கூச்சமில்லாமல் பார்ப்பனர்கள் தானமாகப் பெற்றுக் கொண்டதோடு, உயர்சாதி எதேச்சாதிகாரத்தோடு தாங்கள் உழாமல், வேளாண் மக்களையே கூலிகளாக்கிக் கொண்டு உழவைத்து விவசாயம் நடத்தினார்கள் என்பதும் கல்வெட்டுகளின் வழியாகவும், செப்பேடுகள் வழியாகவும் அறியப்படுகிறது.

அந்தந்த மன்னர்கள், அவரவர்களின் ஆட்சியாண்டில் வெட்டி வெளியிட்ட செப்பேடுகள் பலவற்றிலும், முதல் பகுதியாக வடமொழியில் எழுதப்பட்ட விவரங்களே தொடங்கி அதன் பின்னரே, தமிழில் எழுதப்பட்ட செய்திகள் இருக்கின்றன. அவற்றுள், வேலஞ்சேரிச் செப்பேடு, அன்பில் செப்பேடு, எசாலம் செப்பேடு, சாராலச் செப்பேடு, திருஇந்தளூர்ச் செப்பேடு முதலான எட்டு செப்பேடுகளையும், அவற்றுள் பார்ப்பனர்களுக்கு வெகுவாக அளிக்கப்பட்ட தானங்களைப் பற்றிய குறிப்புகளையும் இக்கட்டுரை விரிவாக ஆய்கின்றது.

## பிற்காலச் சோழர்கள்:

பல்லவர்களின் ஆட்சி கி.பி. எட்டாம் நூற்றாண்டில் முடிவுக்கு வந்த போது, கிட்டத்தட்ட எழுநூறு ஆண்டுகள் தலைதூக்க முடியாமல் அங்கும் இங்கும் சிற்றரசர்களாகச் சிதறிக் கிடந்த சோழப் பரம்பரை பேரரசாக உருப்பெறத் துவங்கிற்று. கி.பி. 846இல் தஞ்சையைக் கைப்பற்றிய சோழனான விசயாலயன், மெல்ல மெல்லத் தன் ஆட்சிக்குரிய நிலப்பரப்பினை விரிவாக்கம் செய்து, கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் ஆட்சி புரிந்து, சோழர்களின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட அடிக்கல் நாட்டினான்.

மன்னர்கள் ஆட்சியில் ஒருவன் இறந்து போனால், அடுத்து ஆட்சிக்கு வருவது அவன் மகன்கள் என்பது எழுதாத சட்டமாக இருந்தது. அதன் பேரில், விசயாலயனின் மகன், முதலாம் ஆதித்தன் என்பவன் கி.பி. 871-இல் ஆட்சிக்கு வந்தான். சில காலத்திற்குள் தன் சோழநாட்டு எல்லையை மேலும் விரிவாக்கம் செய்த ஆதித்தன், ஒரு நாளில் பல்லவன் அபராஜித்தனையே வென்று பல்லவ நாட்டையும் கைப்பற்றினான். கி.பி. 907 வரை ஆட்சியில் இருந்த இவன் காலத்தில் தான், சோழர்களின் ஆட்சியானது பேரரசாக விரிவடைந்தது.

ஆதித்தனையடுத்து அவன் புதல்வன் முதல் பராந்தகன் கி.பி. 907-இல் பட்டம் ஏறினான். இவன் பாண்டி நாட்டையும் வென்றான். கி.பி. 949-ல் தக்ககோலம் என்ற இடத்தில் இராஷ்டிரகூடர்களோடு நடைபெற்ற போரில், பராந்தகனின் மூத்த மகன் இராசாதித்தன் கொல்லப்பட்டான். அதனால், அவனுக்குப் பின் கி.பி. 957-ல் பராந்தகனின் அடுத்த புதல்வன் கண்டராதித்தன் என்பான் பதவிக்கு வந்தான். ஆழ்ந்த சைவ சமயப் பற்று கொண்ட இவனின் மனைவி, புகழ்பெற்ற செம்பியன் மாதேவி என்பாள். இருவரும் சேர்ந்து பல ஆலயங்களை நிறுவினர். இவன் ஆட்சிக் காலத்தில் பெரிதாக வேறெதும் நிகழாத நிலையில், சோழநாட்டு பரப்பளவும் குறைந்து சுருங்கியது. இவனுக்குப் பின் கி.பி. 956இல் இளவரசுப் பட்டம் சூட்டிக்கொண்ட இவன் சகோதரனும் பராந்தகனின் மூன்றாம் மகனுமாக அரிஞ்சயன் என்பான், ஆட்சிக்கு வந்து ஓராண்டு காலமே இருந்து மறைந்தான். அரிஞ்சயனுக்குப் பின், அவன் புதல்வன் இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தர சோழன் கி.பி.957-ல் ஆட்சிப் பொறுப்பேற்றான். பெரும்

வீரனான சுந்தர சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, வீரபாண்டியன் எனும் பாண்டிய மன்னனை வென்றான். இப்போரில் இவனுக்குத் துணையாக, இவன் மூத்த புதல்வனான ஆதித்த கரிகாலன் என்பான் இருந்தான். வீரபாண்டியனின் தலையைக் கொய்து தஞ்சைக்கு எடுத்து வந்தவன் என்ற பெயரை ஆதித்த கரிகாலன் பெற்றான். ஈழநாட்டின் மீது படையெடுத்துச்சென்ற சுந்தர சோழன், அதனை வென்றதோடு வடக்கே சென்று இராட்டிரகூடர்களோடு போர்புரிந்து அந்தப் பகுதிகளையும் வென்றான்.

சோழப் பேரரசின் எல்லையைக் கடல்கடந்து பரப்பிய பெருமையைப் பெற்ற சுந்தர சோழனின் இறுதி நாட்கள் சோகமாயிருந்தன. அவனது வயது மூப்புக் காலத்தில் மூத்த மகனும் பாண்டியனின் தலையைக் கொய்த மாவீரனுமான ஆதித்த கரிகாலன் கி.பி. 969இல் சோமன், ரவிதாசன் என்கிற பஞ்சவன் பிரம்மாதிராஜன், பரமேஸ்வரன் என்கிற இருமுடிச்சோழ பிரம்மாதிராஜன், மற்றும் மலையனூரான் என்ற நான்கு பார்ப்பனர்களால் படுகொலை செய்யப்பட்டான். கண்டராதித்தனின் மகனான மதுராந்தகன் எனும் உத்தமச் சோழன், சுந்தர சோழனின் மறைவுக்குப் பின் பதவிக்கு வர ஆசைபட்டு, தடையாக இருக்கும் கரிகாலனைக் கொல்லத் திட்டமிட்டு, அதனால் பார்ப்பனர்களைப் பயன்படுத்தி இக்கொலையை செய்தான் என்பர் சிலர். வீரபாண்டியனின் தலையைக் கொய்து படுகொலை செய்தமைக்குப் பழிதீர்க்கவே பாண்டியர்கள் சூழ்ச்சி செய்து, பார்ப்பனர்களைக் கொண்டு இக்கொலையை செய்தனர் என்பார் சிலர். எதுவாயினும் 4 பார்ப்பனர்கள் தான் ஆதித்த கரிகாலனைக் கொலை செய்தனர் என்பதற்குச் சிதம்பரம் வட்டத்தில் உள்ள உடையார்குடி கோயிலில் உள்ள கல்வெட்டு சான்றாகக் கிடைத்துள்ளது.

ஆதித்த கரிகாலன் மறைவு எய்தியதால், அவன் இளைய சகோதரனான அருண்மொழிவர்மன் எனப்படும் இராசராசன் தான் பட்டத்திற்கு வரவேண்டும். ஆனால் அவன் மிக இளவயதுடன் இருந்ததாலும், உத்தமச்சோழனே ஆட்சிப் பொறுப்பேற்கவும், அவனுக்குப் பின் தாம் அரசனாகவும் சம்மதித்தான். கி.பி. 970-ல் ஆட்சிக்கு வந்த உத்தமச் சோழன் இயற்கையிலேயே சமயப் பற்றுள்ளவன் என்பதால், அவன் காலத்தில் ஆலயங்களைப் புணரமைக்கும் பணிகளைத் தவிர, பிற பணிகள் எதையும் பெரிதாக மேற்கொள்ளவில்லை. அவன் ஆட்சி கி.பி. 985-ல் முடிவுக்கு வந்து, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாமன்னன் இராசராசனின் ஆட்சி, கி.பி. 985-ல் தொடங்கியது. இராசராசன் தொடங்கி, சோழப் பேரரசின் முடிவுக் காலம் வரையிலான அரசர்களின் பட்டியல் கீழே.

| | | |
|---|---|---|
| 1 | **முதலாம் இராசராசன்** | **கி.பி.** 985-1014 |
| 2 | **முதலாம் இராசேந்திரன்** | **கி.பி.** 1012-1044 |
| 3 | **இராசாதிராசன்** | **கி.பி.** 1018-1054 |
| 4 | **இரண்டாம் இராசேந்திரன்** | **கி.பி.** 1051-1063 |
| 5 | **வீரராசேந்திரன்** | **கி.பி.** 1063-1070 |
| 6 | **அதிராசேந்திரன்** | **கி.பி.** 1068-1070 |
| 7 | **முதற் குலோத்துங்கன்** | **கி.பி.** 1070-1120 |
| 8 | **விக்ரம சோழன்** | **கி.பி.** 1118-1135 |
| 9 | **இரண்டாம் குலோத்துங்கன்** | **கி.பி.** 1133-1150 |
| 10 | **இரண்டாம் இராசராசன்** | **கி.பி.** 1146-1163 |
| 11 | **இரண்டாம் ராசாதிராசன்** | **கி.பி.** 1163-1178 |
| 12 | **மூன்றாம் குலோத்துங்கள்** | **கி.பி.** 1178-1218 |
| 13 | **மூன்றாம் இராசராசன்** | **கி.பி.** 1216-1256 |
| 14 | **மூன்றாம் இராசேந்திரன்** | **கி.பி.** 1246-1279 |

மேற்கண்ட வரிசையான சோழ பரம்பரையில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் முதலாம் இராசராசனும், அவன் மகன் முதலாம்

இராசேந்திரனும் ஆவர். இவர்கள் பற்றிய குறிப்புகளையும் சோழராட்சி முடிவுக்கு வந்ததையும் காண்போம்.

## முதலாம் இராசராசன்:

உத்தமச் சோழனின் ஆட்சிக்குப் பின் அருண்மொழித்தேவன் என்ற இராசராசன் கி.பி. 985-இல் சோழ அரசனாகப் பட்டம் சூட்டிக் கொண்டான். இவன் சுந்தர சோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்த இரண்டாம் மகன். சோழ நாட்டைப் பேரரசாக்கிய பெருமை இவனைச் சாரும். தாம் பதவிக்கு வந்த நாள்முதல், தன் ஆட்சிப்பரப்பை விரிவாக்கம் செய்ய நினைத்தவன், பாண்டிய, சேர நாடுகளின் மீது போர்தொடுத்து வென்றான். சேரநாட்டில் தற்போது கேரளத் தலைநகரமாக உள்ள திருவனந்தபுரம் அருகில் அன்றைக்கு இருந்த காந்தளூர்ச்சாலை என்ற இடத்தை அழித்தவன் என்ற பெயர் இவனுக்கு உண்டு. இந்த இடம் பார்ப்பனர்களுக்கு வேதக்கல்வி கற்பிக்கும் பாடசாலை என்றும், இங்கு மறைமுக ஆயுதப்பயிற்சியும் அளிக்கப்படும் என்றும் அறிந்த இராசராசன், அங்கு பயிற்சி பெற்ற நான்கு பார்ப்பனர்கள் தான், தன் சகோதரன் ஆதித்த கரிகாலனைக் கொன்றவர்கள் என்பதை அறிந்து ஆத்திரம் கொண்டு, காந்தளூர்ச் சாலையை அழித்தான் என்றும் கூறுகின்றனர். இவன் காலத்தில் தமிழகம் மட்டுமின்றி வடக்கேயிருக்கும் சளுக்கிய, வேங்கி நாடுகள் எனப்படும் ஆந்திர, கன்னடப் பகுதிகளையும் வென்றான். ஈழத்தின் மீது போர்தொடுத்து அங்கு ஆண்டுகொண்டிருந்த ஐந்தாம் மகிந்தன் என்பானை வென்று அந்நாட்டைக் கைப்பற்றினான். தம்மிடம் கடற்படையை வைத்திருந்த இராசராசன் கடல்கடந்து சென்று போரிட்டுத் தற்போதுள்ள மாலத்தீவு பகுதிகளையும் தன் ஆட்சிக்குட்படுத்தினான்.

சிறந்த சிவபக்தனாகத் திகழ்ந்த இராசராசன், தன் வாழ்நாள் திட்டமாகத் தஞ்சையில் மாபெரும் சிவாலயத்தை எழுப்பினான். பெருவுடையார் கோயில் என்றும் பெரிய கோயில் என்றும் அழைக்கப்படும் அந்த ஆலயத்தில் பணிபுரிவதற்காக நானூறு தேவரடியார்களைத் தளிச்சேரிப் பெண்டுகள் என்ற பெயரில் நியமித்து அவர்களுக்குத் தனித்தனி வீடுகளும், நிலங்களும் அளித்தான். பிற சமயங்களையும் ஆதரித்த இவன் நாகப்பட்டினத்தில் இருந்த சூடாமணி புத்த விகாரத்தைச் சீர்செய்ய ஆனைமங்கலம் என்ற கிராமத்தை அளித்தான். இவன் ஆட்சிக்காலத்தில் நிருவாகத்தில் பல நடைமுறைகள் கொண்டு வரப்பட்டன. அது போல பார்ப்பனர்களுக்கு நிலதானம் அளித்தலும், அவர்கள் கூறிய வேள்விகளைச் செய்தலும் நடைபெற்றன. இறுதியாக இவன் மறைவுற்ற கி.பி. 1014-இல் கும்பகோணத்தையடுத்த திருவியலூர் ஆலயத்தில் துலாபாரம் செய்தான் என்று சொல்லப்படுகிறது.

## முதலாம் இராசேந்திரன்:

தன் தந்தையாரான இராசராசன் உயிரோடு இருக்கும்போதே கி.பி.1012-இல் இளவரசனாகப் பட்டம் ஏறிய இராசேந்திரன், தந்தையின் மறைவுக்குப்பின் கி.பி.1014-ல் ஆட்சிக்கு வந்தான். தன் தந்தையைக் காட்டிலும் அதிக ஆற்றலும் வீரமும் செறிந்தவனாகத் திகழ்ந்த இவன், தமிழகம் மட்டுமின்றி வடக்கே கங்கைக்கரை வரையில் படையெடுத்துச் சென்று பல நாடுகளை வென்றான். இராசராசனைப் போல் ஈழத்தின்மீது போர்தொடுத்து வென்றான். தன் கடற்படையைப் பெரிய அளவில் விரிவு படுத்திய இவன் தற்போதைய மலேசியாவான கடாரம், ஜாவா, சுமத்ரா, நிக்கோபார் தீவுகள்

போன்ற இடங்களில் போர்வெற்றிகள் பெற்றுத் தன் ஆளுமையை நிலைநாட்டினான்.

கங்கை வரை படையெடுத்து கண்ட வெற்றியின் நினைவாகக் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்ற ஊரை நிறுவி அதனைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தவன், தன் தந்தை நிறுவிய தஞ்சை பெரியகோயிலைப் போன்று ஒரு கோயிலை இங்கு அமைக்க விரும்பி, அதைப்போல் ஓர் ஆலயத்தை எழுப்பிக் 'கங்கைகொண்ட சோழீச்வரம்' என்ற பெயருடன் விளங்கச் செய்தான். தந்தையைப் போலவே நாட்டின் நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு ஆட்சி புரிந்தவன் கி.பி.1044-இல் மறைந்தான். அவனுக்குப் பின் அவன் மகன்கள் முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், மற்றும் வீரராசேந்திரன் ஆகியோர் தொடர்ந்து ஆட்சி புரிந்தனர்.

இந்த வரிசையில் இறுதியாக ஆண்ட மூன்றாம் இராசேந்திரன் வலுவிழந்து, பாண்டிய நாட்டை அப்போது அரசாண்ட சுந்தர பாண்டியனுக்கு அடங்கித் திரை செலுத்தும் நிலைக்கு ஆளாகிப் போனான். கி.பி.1279-இல் இந்தச் சோழ மன்னன் மரணமடைந்த பின்னர், சோழ நாடு முழுவதும் பாண்டிய நாட்டோடு இணைக்கப்பட்டுச் சுந்தர பாண்டியன் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

## சோழராட்சியில் புதிய பார்ப்பனர்களின் வருகை:

ஏற்கனவே தமிழகத்தில் நிலைத்துப் போன பார்ப்பனர்களன்றி, ஒவ்வொரு கால கட்டத்திலும் அண்டை நாடுகளில் பஞ்சத்தில் இருந்தவர்கள், செல்வச் செழிப்போடு இருந்த தமிழகத்தை நோக்கி நகர்ந்த வண்ணமிருந்தனர். அதற்கு உறுதுணையானது போல, தமிழகத்து அரசர்கள் அப்பகுதிகளுக்குப் படையெடுத்துச் சென்று வெற்றி கண்டபோதெல்லாம் வழக்கமாக கொண்டுவரும் பொருட்செல்வங்கள், பெண்கள், அடிமைகளோடு இந்த பார்ப்பனர்களும் பெருமளவில் சேர்ந்து கொண்டனர். அவர்களுக்கே உரித்தான வளைந்துபோகும் தன்மையும், வசமிருந்த வேத மந்திரங்களும், மனு ஸ்மிருதியும் அதற்கு உதவின.

'அரசனின் நன்மைக்கானதே தங்களின் யாகம்' என்று சொன்னதை நம்பியிருந்த அந்நாள்அரசர்கள்அதற்குமயங்கியதோடு, எந்த எதிர்ப்பையும் காட்டாமல் மந்தை மந்தையாக அண்டை நாட்டுப் பார்ப்பனர்களையும் அழைத்து வந்தனர்.

பிற்காலச் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பார்ப்பனர்களின் இந்தப் பெயர்வும் வருகையும் உச்சத்தை அடைந்தது. ஆம், இச்சோழ வம்சத்தில் மாமன்னனாக விளங்கிப் பல அயல்நாடுகளின் மீது படையெடுத்துப் பல வெற்றிகளைக் கொண்ட இராசராசனும், அவனுக்குச் சளைத்தவனல்லன் என்ற வகையில் அவனைவிடப் பெரும் வீரனாகவும், பல நாடுகளைப் பிடித்துக் 'கங்கை கொண்டான்', 'கடாரம் கொண்டான்' என்றெல்லாம் பெயர்பெற்றவனும், மாபெரும் கடற்படையை வைத்திருந்தவனுமான அவன் மகன் இராசேந்திரனும், தாம் பெற்ற வெற்றிகளால் அயல்நாடுகளிலிருந்து குறிப்பாக ஆந்திர, கன்னடப் பகுதிகளிலிருந்து பெரும் செல்வங்களை அள்ளி வந்ததுபோல, அப்பகுதிகளிலிருந்த பெரும் எண்ணிக்கையிலான பார்ப்பனர்களையும் பெண்களையும் உடனழைத்து வந்தனர் என்பது வரலாறு.

இராசராசன் தஞ்சையில் கட்டிய பெரிய கோயிலிலும், கங்கை கொண்ட சோழபுரத்தில் இராசேந்திரன் கட்டிய அதைப்போன்ற பெரும்

கோயிலிலும் மட்டுமின்றி, அவர்களாலும், அவர்கள் குடும்பத்தாராலும் நாடு முழுவதும் பல ஊர்களில் கட்டப்பட்ட கோயில்களிலும் பூசனை செய்யும் பணிக்காகவும், பிற பணிகட்காகவும் இங்கிருந்த பார்ப்பனர்கள் எண்ணிக்கை போதாதென்று கருதி, அயல்நாடுகளிலிருந்து பார்ப்பனர்களைக் கொண்டு வந்தனர். அப்படி வந்தவர்களில் பெரும்பான்மையோர் ஆந்திர, கன்னட பகுதிப் பார்ப்பனர்கள். பல வரலாற்றார் இந்த நிகழ்வுகள் பற்றிக் கூறியிருப்பினும், டாக்டர் கே.கே.பிள்ளையின் கூற்றை விரிவாக இங்கு காண்பது பொருத்தமானது.

“சங்ககாலப் பார்ப்பனர்கள் தமிழ் மக்கள் ஆவர். அவர்களுடைய பண்பாடும் நாகரிகமும் தமிழ் மக்கள் வளர்த்து வந்தவையேயாம். அவர்கள் பேசியதும், புலமை பெற்றதும் தமிழ்மொழியில் தான். அவர்கள் தம்மைத் தமிழகத்தில் பிறந்து வளர்ந்த தமிழராகவே எண்ணி வாழ்ந்தனரேயல்லாது, தாம் அயலிடங்களிலிருந்து குடிவந்தவர்கள் என்றோ, அயல்மொழி பேசியர்கள் என்றோ ஒரு காலமும் கருதியவர்கள் அல்லர். ஆனால், பல்லவர் காலத்திலும், சோழர், பாண்டியர் காலத்திலும் மன்னரின் அழைப்பின் பேரிலோ, தாமாகவோ, தமிழகத்தில் அலையலையாக வந்து குடியேறிய பிராமணர்கள் புதுப்புதுப் பெயர்களைக் பூண்டவர்கள்; புதிய குலத்தருமத்தைக் கடைபிடித்தவர்கள்; வடமொழியையன்றி வேறு மொழியை விரும்பாதவர்கள்; வடமொழியின் ஏற்றத்துக்கு என மன்னரிடம் பல சலுகைகளையும் செல்வாக்கையும் கைக்கொண்டு தமிழுக்குக் கூற்றமாக வந்தவர்கள்.

தமிழகத்து வேந்தர்கள் தமிழகத்து அந்தணரிடம் எக்குறைபாடுகளைக் கண்டார்கள் என்பது விளங்கவில்லை. தமிழகத்தின் சமயவளர்ச்சியும், வேதப்பயிற்சியும், ஆகமங்களின் வளர்ச்சியும், கோயில்வழிபாடும் பலதரப்பட்ட துறைகளில் விரிவடையவே அவற்றுக்கு ஏற்றவாறு தம்மைத் திருத்தியமைத்துக் கொள்ளும் ஆற்றல்கள் தமிழ்ப் பிராமணரிடம் பெருகவில்லை போலும். ஆனால் வடவரின் இலக்கியமும், சமயக் கருத்துகளும், பண்பாடுகளும் தமிழ்நாட்டில் பெருக்கெடுத்துப் பாயவே அவற்றை வளர்ப்பதற்கும், மேற்கொண்டு பல புதுமைகளைப் பெருக்கிக் கொள்ளுவதற்கும், மன்னர்கள் ஆயிரக்கணக்கில் அயல்நாட்டுப் பிராமணரை இறக்குமதி செய்து கோயில்களிலும், மடங்களிலும், கல்விநிறுவனங்களிலும் அவர்களை அருச்சகர்களாகவும், புரோகிதர்களாகவும், வேத பாராயணம் செய்வோராகவும் ஆங்காங்கு அமர்த்தினர். வேதநெறி தழைத்தோங்குவதற்காக மன்னரும் மக்களும் புதிதாகக் குடிபுகுந்த பிராமணருக்குப் பொன்னையும், பொருளையும், குடியுரிமைகளையும் வாரி வழங்கினர். பிராமணருக்குத் தனி நிலங்களும், முழுமுழுக் கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அக்கிராமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம், பிரமதேயம் எனப்பல பெயர்களில் வழங்கின. இக் குடியிருப்புகள் அனைத்தும் பிராமணர்களின் நிருவாகத்திற்கே விடப்பட்டன. அரசனுடைய ஆணைகள் அவற்றினுள் செயல்படா. அக் கிராமங்களுக்கு எல்லாவிதமான வரிகள், கட்டணங்கள், கடமைகள், ஆயங்கள் முதலியவற்றினின்றும் முழுவிலக்கு அளிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்தின் உள்ளாட்சிக்கும் ஒரு மகாசபை அமைத்துத் கொண்டு, பிராமணர்கள் தத்தம் கிராமத்தின் நிருவாகத்திற்குத் தாமே பொறுப்பேற்றுக் கொண்டார்கள். பிராமணர் தமிழகம் முழுவதும் பரவிக் குடியமர்ந்தார்கள். உள நிறைவுடன், நல் வாழ்க்கையில் நின்று வேதம் ஓதி, இறைப்பணி புரிந்து, அறம் ஓம்பி, மக்களிடையே கல்வியறிவையும் ஆன்மிக விழிப்பையும் தோற்றுவிப்பதற்காகவே மன்னரும் மக்களும் அவர்கட்குத் துணை நின்றார்கள். ஆனால் விளைவோ வேறு

விதமாயிற்று. தமிழ் மன்னர்களும், தமிழ் மக்களும் வழங்கிய வாழ்க்கை நலன்களைப் பெற்ற பிராமணர்கள் தனித்து வாழ்ந்து, மக்களிடையே குல வேறுபாடுகளைப் பெருக்கி, தமிழர் அனைவரையுமே சூத்திரர் என்ற இழிகுலத்தினராகக் கருதி, கோயில்களிலும், மடங்களிலும் ஏனைய பொது அறச்சாலைகளிலும் ஒதுக்கி வைத்துவிட்டார்கள். ஒரு கோயிலைக் கட்டிக் குடமுழுக்குச் செய்விக்கும் தமிழன் ஒருவன், தான் கட்டிய கோயிலிலேயே தொலைவில் ஒதுங்கி நிற்கவும், பிராமணர்களின் பின்னின்று கோயில் 'பிரசாதங்களைப்' பெறவும் ஒப்புக் கொண்டு விட்டான். கோயில் கருவறையில் வடமொழியான ஆரவார ஓசை ஒலிக்கவும், தமிழ் ஒலி மறையவும் வழக்காறுகள் வகுக்கப்பட்டன. தேவார ஆசிரியர்கள் காலத்தில் தமிழர் கருவறைக்குட் செல்லும் உரிமை பெற்றிருந்தும் சோழர் பாண்டியர் காலத்தில் அவ்வுரிமையை அவர்கள் இழந்துவிட்டார்கள். [1]

இப்படியாகத் தமிழகத்திற்குத் தங்களால் அழைத்து வரப்பட்ட ஆயிரக்கணக்கான பிறமொழிப் பார்ப்பனர்களிடம் மயங்கிப்போன சோழ மன்னர்கள், அவர்களின் வேத, சாஸ்திர, மந்திரங்கட்குக் கட்டுண்டு, அவர்கள் சொற்படி யாகங்கள் நடத்திப் பலப்பல தானங்களை அள்ளிக் கொடுத்தனர். அவை குறித்துக் காண்போம்.

## பார்ப்பனர்கள் பெற்ற முக்கிய தானங்கள்:

பன்னெடுங்காலமாகத் தமிழகத்தில் நிலைத்திருந்த பார்ப்பனர்கள், தமிழ் மக்களோடு வாழ்ந்து, தமிழ் பேசியும் இணக்கமாக வாழ்ந்திருந்தவர்கள் மெல்ல மெல்ல தங்கள் மனநிலையில் மாற்றமடைந்திருந்த வேளையில், அயல் மண்ணிலிருந்து வந்த பார்ப்பனர்களின் குணநலன்களும், சாதுர்யமான நடவடிக்கைகளும் அவர்களின் மாற்றத்தை மேலும் வலுவடையச் செய்தது. நாம் ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்தில் அனைத்து பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்துகொண்டனர். தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டி, சமூகத்தில் உயர் இடத்தைப் பிடித்திட வேண்டும் என்ற நோக்கில், எப்படியாவது மன்னர்களின் மனதில் புகுந்து, தங்கள் சாஸ்திரங்களைச் சட்டமாக்கிட முனைந்தனர். இது பல்லவர்கள் காலத்திலேயே துவக்கப்பட்டாலும், பிற்காலச் சோழர்கள் காலத்தில் உச்சத்தை அடைந்தது.

சங்க காலத்திலேயே தமக்குரிய வேள்விகளைச் செய்ய மன்னர்களை வற்புறுத்தி அதனைச் செயல்படுத்திய பார்ப்பனர்கள், காலப்போக்கில் அதில் வளர்ச்சியினைக்கண்டார்கள். மன்னன் வேள்வி செய்தலைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அதுபற்றி விரிவாகக் கூறுகின்றன. மணிமேகலைக் காப்பியத்தில் ஆபுத்திரன் என்பான், அன்றைய நாளில் பார்ப்பனர்கள் வேள்வி செய்ததையும், அத்தீயில் பசுவைக் கொன்று எரிப்பதையும், அதனை உண்ணுதலையும் வழக்கமாகக் கொண்டிருந்ததை எதிர்ப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அதுகுறித்த இப்பாடல் அதனை உறுதி செய்கிறது.

**"அப்பதி தன்னுள் ஓர் அந்தணன் மனைவியின்**
**புக்கோன்-ஆங்கு புலை சூழ் வேள்வியில்**
**குரூஉத் தொடை மாலை கோட்டிடைச் சுற்றி**
**குரூஉப் பகை அஞ்சி வெய்து உயிர்த்துப் புலம்பி**
**கொலை நவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி**
**வலையிடைப் பட்ட மானே போன்று ஆங்கு**
**அஞ்சி நின்று அழைக்கும் ஆத்துயர் கண்டு**
**நெஞ்சு நடுக்குற்று நெடுங்கணீர் உகுத்து**
**கள்ள வினையின் கடுந் தயர் பாழ்பட**
**நள் இருள் கொண்டு நடக்குவன் என்னும்**
**உள்ளம் கரந்து ஆங்கு ஒரு படை ஒதுங்கி**
**அரல்லிடை ஆக்கொண்டு அப்பதி அகன்றோன்."**

பொருள்: ஒரு நாள் அச்சிறுவன் (ஆபுத்திரன்) அவ்வூரில் உள்ள அந்தணன் வீட்டிற்குச் சென்றான். அங்கு ஊன் உண்ணுதலைக் கருதும் வேள்விச் சாலையைக் கண்டான். அங்கே அழகிய நிறம் பொருந்திய பசு, அதன் கொம்பில் மாலை சுற்றப்பெற்று, அச்சத்தைத் தரும் நிலையில் புகைக்குப் பயந்து பெருமூச்செறிந்து நின்று கொண்டிருந்தது. அதனைக் கண்ட சிறுவன் நடுங்கிக் கண்ணீர் சொரிந்து மனம் வருந்தினான். பசுவின் கொடுந்துயர் நீங்க ''நள்ளிரவில் இதனைத் திருடிச் செல்வேன்'' என்று மனதுக்குள் நினைத்து ஒருபுறம் ஒதுங்கி இருந்தான். நள்ளிரவு வர, தாம் கருதிய நிலையில் அப்பசுவைக் கவர்ந்துகொண்டு அவ்வூரை விட்டு அகன்றான். [2] [3]

இந்த வேள்விகள் எனப்படும் யாகங்களை அரசர்கள் செய்யவேண்டும், அப்படிச் செய்யாது விடின் நாட்டுக்கும், அரசனுக்கும் கேடு விளையும் என்று பார்ப்பனர்களால் சொல்லப்பட்டதால், தமிழ் மன்னர்களும், தாம் காணாத புதுமையான, புரியாத ஒன்றைக் கேட்டுத் தமக்கும், நாட்டுக்கும் வரும் கேடுகளைத் தவிர்க்க வேண்டும் என்ற அச்சத்திலும், அக்கறையிலும் அதற்கு இசைந்தனர். இது காலத்திற்கும் தொடர்ந்த கதையாயிற்று. இது குறித்த உண்மையை ஒரு வரலாற்றாரின் கீழ்க்கண்ட வரிகள் உறுதி செய்கின்றன.

''நாட்டுக்கும் குடிகளுக்கும் நலன் விளைய அரசன் சில வேள்விகள் செய்ய வேண்டும் என்று வடமொழி அறநூல்கள் கூறுகின்றன. வடவர்செல்வாக்குதமிழகத்தில்பரவியபோது, தமிழ்வேந்தர் பல யாகங்களைச் செய்து, 'பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்றும் 'இராசசூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளி' என்றும் அடைமொழிகளைப் பெற்றனர். பல்லவர் காலத்தில் சிவஸ்கந்தவர்மன் என்ற பல்லவ மன்னன், அசுவமேதம், அக்னிஷ்டோமம், வாஜபேயம் என்ற வேள்விகளைச் செய்தான் என்று உதயேந்திரப் பட்டயங்கள் உரைக்கின்றன. பிற்காலச் சோழர்களில் இராசாதிராசன் காலத்தில் பரிவேள்வி (அசுவமேதம்) நடைபெற்றது. கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தென்காசிப் பாண்டியன் ஒருவன் வேதவேள்வி செய்வித்து 'சோமயாஜி', 'தீட்சிதர்' என்ற பட்டங்களைப் பெற்றதாகக் கல்வெட்டு உணர்த்துகிறது.

## பதினாறு மகா தானங்கள் (சோடச மகா தானம்):

அரசன் இத்தகைய வேள்விகளைச் செய்யும் பொழுதும், தன் பிறந்தநாள் விழாவிலும், பிற சிறப்பு நாட்களிலும் பலவகைத் தானங்ளைச் செய்வது வழக்கம். நாட்டு நலத்திற்கும், குடிகள் நலத்திற்கும் இவ்வாறு தானம் செய்தல் அரசனது கடமை என்று நம்பப்பட்டது. ஒரு கல்வெட்டில் 16 வகை மகாதானங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவை:

1. பிரம்ம அண்டம் (பொன்முட்டை),
2. மஹா பூத கடம் (பொன்னால் ஆன தாதுக்கள் கலம்),
3. கல்ப லதா (பொன் கொடிகள்),
4. கல்ப பாதபம் (கற்பக மரம்),
5. ரத்ன தேனு (நகைகள் அணியப் பெற்ற பசு),
6. ஹிரண்ய காமதேனு (பொன் காமதேனு),
7. சப்த சாகரம் (எழு கடல்),
8. பிருத்வி / தாரா (பொன்னாலான தரை),
9. ஹிரண்ய அசுவ ரதம் (குதிரைபூட்டப்பெற்ற பொன் தேர்),
10. ஹேம ஹஸ்தி ரதம் (பொன்னாலான யானை பூட்டப்பட்ட தேர்),
11. விஷ்ணு சக்ரம் (உலகம் சுற்றும் பொன் உருளை),

12. கோ சஹஸ்ரம் (ஆயிரம் பசுக்கள்),

13. ஹிரண்ய அசுவம் (பொன் குதிரை),

14. துலா புருஷம் (தானம் செய்பவனது எடைக்கு எடை பொன் வழங்கல்),

15. ஹிரண்ய கர்ப்பம் (பொன் கலத்துள் நுழைந்து கரு இருத்தல்),

16. பஞ்ச லாங்கலம் (ஐந்து கலப்பைகள்).

இவற்றுள், தன்நிறையளவு பொன்னை வழங்குதல் 'துலாபாரம்' (துலா புருஷ தானம்) எனப்பட்டது. சேரன் செங்குட்டுவன் கங்கைக் கரையில் மாடல மறையோனுக்குத் துலாபார தானம் செய்தான் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. அரசன், சிறந்த புலவர்க்கும் மறையவர்க்கும் சமயத் தலைவர்க்கும் நிலங்களையும், சிற்றூர்களையும் தானமாக வழங்கினான். சின்னமனூர்ச் செப்பேடும், பல்லவர், பிற்காலச் சோழர், பாண்டியர், நாயக்கர் செப்புப் பட்டயங்களும் இந்த உண்மையை உணர்த்துகின்றன. பொன்னைப் போல் வளம்கொழிக்கும் ஆற்றங்கரை ஊர்களும் இடங்களும், வேதங்களில் வல்ல மறையோர்க்கு வழங்கப்பட்டதைப் பட்டயங்கள் தெரிவிக்கின்றன. பிரமபுரி, பிரமதேசம் என்பன பிராமணருக்குத் தானம் கொடுக்கப்பட்ட ஊர்களேயாகும்." [4]

### வேளாண்மையும் தான நிலங்களும்:

சாஸ்திரப்படி, பார்ப்பனர்கள் விவசாயம் செய்யக்கூடாது என்று சொல்லப் படுகிறது. இருப்பினும் சோழ மண்ணைப் பொருத்தமட்டில் விவசாயமே பெரும்பான்மையானதும், வளம்கொழிப்பதுமான தொழிலாக இருந்தமையால், அதைத் தங்கள் வசமாக்கிக் கொண்டால் தங்கள் வாழ்வும் வளமும் கொழிக்கும் என்று அவர்கள் கருதினர். உஞ்சவிருத்திப் பார்ப்பனர்களின் இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதைத் தங்கள் தலைமேற்கொண்ட கடமையாகக் கருதிய சோழ மன்னர்கள், அவர்களுக்குச் சிறிதும் தொடர்பில்லாத வேளாண் தொழிலுக்குரிய விளைநிலங்களையும், அதன் உரிமைகளையும், மண்ணின் மைந்தர்களாயிருந்த தமிழகத்து வேளாண் மக்களிடமிருந்து ஒரேநாளில் பறித்து, பார்ப்பனர்களுக்குத் தானமாகக் கொடுத்தார்கள் என்பதும், விவசாயம் சாஸ்திர விரோதமாக இருந்தும் விளைநிலங்களைக் கூச்சமில்லாமல் பார்ப்பனர்கள் தானமாகப் பெற்றுக் கொண்டதோடு, உயர்சாதி எதேச்சாதிகாரத்தோடு தாங்கள் உழாமல், முன்பு நில உரிமையாளர்களாக இருந்த மக்களையே கூலிகளாக்கிக் கொண்டு உழவைத்து விவசாயம் நடத்தினார்கள் என்பதும் கிடைத்த பல கல்வெட்டுகளின் வழியாகவும், செப்பேடுகள் வழியாகவும் அறியப்படுகிறது.

அரசர்கள் பார்ப்பனர்களுக்கு அளித்த நிலங்கள் யாவும் 'சதுர்வேதி மங்கலம்', 'அகரம்' என்ற பெயர்களில் அழைக்கப்பட்டன. அதுபோல அவர்கள் இலவசமாக வடமொழியும், வேதமும் பயிலுவதற்காக அமைக்கப்பட்ட பள்ளிகள் 'பட்டவிருத்தி' என்ற பெயரில் தானமாக வழங்கப்பட்டன.

### உணவுத் தானங்கள் (பிராமண போஜனம்):

இப்படி ஊருக்கு ஊர் நிலங்களைத் தானமாகப் பெற்றதோடின்றிக் கோயில்கள் இருந்த அனைத்து இடங்களிலும், மடங்களிலும் 'பிராமண போஜனம்' எனப்படும் பார்ப்பனர்களுக்கு அன்றாடம் உணவளிக்கும் திட்டங்களும் அவர்களின் சாஸ்திரப்படி 'புண்ணிய காரியம்' என்று சொல்லப்பட்டதால் அதனை அரசர்களும், அவர்கள் குடும்பத்தாரும் தலைமேற்கொண்டு

நிறைவேற்றினர். நாடு முழுவதும் 'பார்ப்பன போஜனம்' என்று பார்ப்பனர்களுக்கு இலவசமாக உணவளிக்கும் நிகழ்வுகள், அரசு மற்றும் ஆலயங்கள் சார்பில் நடத்தப்பட்டன. அதற்காக பல கொடைகள் அரச குடும்பத்தினராலும், பார்ப்பனரல்லாத மக்களாலும் அளிக்கப்பட்டன. சோழர்கள் ஆட்சிக் காலத்தில் நிகழ்த்தப்பட்ட பிராமண போஜனக் கொடைகள் பற்றித் தமிழ்நாடு தொல்லியல்துறையின் வெளியீடான 'நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள்' என்ற நூலில் இருந்து சான்றாகச் சில குறிப்புகளைப் பார்ப்போம்.

"நாகப்பட்டினம் மாவட்டம், செம்பியன்மாதேவி சதுர்வேதிமங்கலம் என்ற ஊரில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தில் உள்ள கி.பி. 10ஆம் நூற்றாண்டு உத்தமசோழன் காலத்திய கல்வெட்டு ஒன்றில், ஒவ்வொரு மாதப்பிறப்பு (சங்கராந்தி) நாளிலும் 100 பிராமணர்களுக்கு உணவுண்ண சோழனின் மனைவி திரிபுவன மாதேவியார் செய்த நிலக்கொடையைக் குறிக்கிறது. கொடையளிக்க வாங்கப்பட்ட நிலம், தாயும் மகளுமான இரு பெண்களின் ஸதனமான நிலம் என்ற கூடுதல் செய்தி கல்வெட்டு ஆண்டறிக்கை மூலம் தெரிய வருகிறது.[5]

இதே ஆலயத்தின் மற்றொரு கல்வெட்டில், உத்தமசோழனின் மற்றொரு மனைவியான கண்ணப்பரசி சொர்ணமாதேவியார் என்பவர், தனது பிறந்த நாளான சித்திரைக் கேட்டை நாளில் சதுர்வேதிபட்ட தானப்பெருமக்கள் உண்பதற்காக அவர்களிடம் ஊர்க்கல் நிறைப்படி 507.5 கழஞ்சுப் பொன் அளித்ததையும் இதன் முதலழியாமல் பொலிசைக்கொண்டு (வட்டி) பயன்படுத்தப் படுதல் வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [6]. நாகப்பட்டினத்தில் உள்ள காயாரோகணமுடையார் ஆலயத்தில் கிபி.1016ஆம் ஆண்டில் முதலாம் இராசேந்திரன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் சூரக் கேணிக் கொல்லத்தைச் சேர்ந்த வாணிகன் தாமந்தையன் என்பார், திருக்காரோணமுடையார் கோயிலில் தினமும் 5 பிராமணர்கள் உணவு கொள்ள, 180 காசுகளைத் தேவகன்மிகள் வசம் கொடுத்ததாகக் குறிக்கிறது." [7].

## இரு மகா தானங்கள்:

இந்தப் பிராமண போஜன தானங்கள் தவிர்த்து, பார்ப்பனர்கள் தேவைப்படும் போதெல்லாம் நடத்திய யாகங்களில், எண்ணற்ற பொருட்செலவுகள் மன்னர்களால் செய்யப் பட்டன. அந்நிகழ்வுகளின் போது பொன்னும், பொருளும், ஊர்களும் தானமாக வழங்கப்பட்டன. ஒரு படைபெடுப்பை அரசன் நடத்தி, அதில் வெற்றி கண்டு திரும்பினான் என்றால் பார்ப்பனர்களுக்குத் தான் கொண்டாட்டம் என்ற நிலையை ஏற்படுத்தியிருந்தனர். போர்க்களத்தில் ஆயிரக்கணக்கான எதிரிகளைக் கொலைசெய்து வீழ்த்திய பாவம் நீங்க வேண்டும், மன்னன் நீண்டநாள் நோய்நொடியின்றி வாழவேண்டும் என்றால், அதற்காகச் சில சிறப்பு தானங்களைத் தரவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதில் முக்கியமான இரண்டினைக் காண்போம். இத்தானங்களைச் சோழ மன்னர்கள் பலரும் தங்கள் ஆட்சியின்போது தவறாமல் நடத்தி வந்துள்ளனர்.

1. முதலாம் பராந்தகன் (கி.பி.922-இல்) தனது 15-ஆம் ஆட்சியாண்டில் துலாபாரம், இரண்யகர்ப்பம் போன்ற தானங்களைப் பலமுறை செய்தான் என்று உதயேந்திரம் செப்பேடு கூறுகிறது.

2. முதலாம் இராசராசன் தனது இறுதிக்காலத்தில் (கி.பி.1014-இல்) துலாபார தானத்தை நடத்தினான் என்று கூறுப்படுகிறது. தொடர்ந்து வந்த சோழ மன்னர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

## துலாபாரம்:

இது பதினாறு மகா தானங்களில் முதன்மையான தானமாகும். துலா என்றால் தராசு. தராசில் தானம் கொடுப்பவரை எடைபோட்டு, அதற்குச் சமமான பொருளைத் தானமாகக் கொடுப்பது என்று பொருள். இதனைத் துலாபுருடதானம் எனவும் வழங்குவர். இந்தத் தானத்தை அயனம், பக்ஷம், யுகாதி, கிரகணம், மன்வந்தரத் துவக்கம், சங்கராந்தி, பௌர்ணமி, துவாதசி, அஷ்டமி, யாக வேளைகள், திருமணம் முதலான காலங்களிலும், தீயகனவு, அச்சமூட்டும் காட்சி முதலியன நீங்கவும், செல்வம் அல்லது அந்தணர்கள் கிடைக்கும் போதும் செய்யலாம் என்றும், சிரத்தை உருவாகும் போதும் செய்யலாம் என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் தானத்தைப் புண்ணிய தீர்த்தம், கோயில், கோசாலை, கிணற்றடி, நந்தவனம், நதிக்கரை, வீடு, காடு, குளம், தூய்மையான இடங்களில் செய்யலாம். அதன் செய்முறையாவது:

புண்ணிய திதி வரும்போது அந்தணர்களைக் கொண்டு வேதகோஷம் செய்யச் சொல்லிப் பன்னிரண்டு அல்லது பதினாறு கை உயரமுள்ள மண்டபத்தை எழுப்ப வேண்டும். அது நான்கு புத்ராசனங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதன் நடுவே ஏழு அல்லது ஐந்து கை உயரமுடைய திண்ணை அமையவேண்டும். அதன் நடுவே மரத்திலான தோரணத்தை அமைக்க வேண்டும். பிறகு நான்கு திசைகளிலும் நான்கு குண்டங்களை அமைக்க வேண்டும். தோரண முனையில் நல்ல நூலால் சுற்றப்பட்ட பூரண கும்பங்களை வைக்க வேண்டும். இரு தாமிரக் குண்டங்கள் கொண்ட யாகபாத்திரங்களையும் ஸ்ருவங்களோடு அமைக்க வேண்டும். அவை ஒரு கை உயரத்தோடும், எள் - நெய் முதலியவற்றால் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். கிழக்கு மற்றும் வடதிசைகளில் கிரகங்களையும், தெய்வங்களையும் பூசை செய்ய ஒருகை அளவுள்ள திண்ணையை அமைக்க வேண்டும். பிறகு பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகியோருக்கு அர்க்கியம், அர்ச்சனை முதலியவற்றைச் செய்ய வேண்டும்.

தராசினை நான்கு கை அளவுடையதும், அதே அளவு பாதங்களை உடையதுமாகச் செய்ய வேண்டும். இரு புறத்திற்கும் இடையே இரு கையளவு இடைவெளி இருக்க வேண்டும். அதன் நடுவே தங்கத்தினால் வாசுதேவன் உருவத்தை வைக்க வேண்டும். தராசின் நீளம் நான்கு கையளவு இருக்க வேண்டும். தங்கத் தகடுகளால் அலங்கரிக்கப்பட்டதும் நல்ல உலோகத்திலான இரு சங்கிலிகள் அமைக்க வேண்டும்.

இப்படித் தங்கத்திலான தராசை இரத்தின மாலைகளைக் கொண்டு அலங்கரித்துத் தாமரையை நடுவில் கொண்ட சக்கரத்தை எழுதவேண்டும். மேற்பகுதியின்மேல் ஐந்து வண்ணங்களைக் கொண்ட கொடிகளை வைக்க வேண்டும். பிறகு நல்ல குலத்தில் தோன்றியவர்களும், சீலமுடையவர்களுமான அந்தணர்களை அழைக்க வேண்டும். வேதங்களை வேதாகமங்களை அறிந்தவரும், நல்ல இடத்தில் பிறந்தவரும், சிறந்தவரை ஆச்சாரியராக நியமிக்க வேண்டும். கிழக்கில் இருக்கு வேதிகளையும் தெற்கில் யசுர் வேதிகளையும் நிறுத்த வேண்டும். பிற்பகுதியில் சாம வேதிகளையும் வடக்கில் அதர்வண வேதிகளையும் நிறுத்த வேண்டும். விநாயகர், திக்பாலகர்கள், கிரகங்கள், ஆதித்யர், கணங்கள், பிரம்மா, விஷ்ணு, சிவன், வசுக்கள் போன்றோர்க்கு நான்கு ஹோமங்களைச்செய்ய வேண்டும். இவர்களின் சூக்தங்களையும் ஜபிக்க வேண்டும். ஆவாகனம் செய்தபிறகு அந்தணர்களுக்குத் தங்க ஆபரணங்களைத் தானம் செய்ய வேண்டும். ஆச்சார்யருக்கு இருமடங்கு தரவேண்டும்.

பிறகு எல்லோரும் உபவாசமிருந்து வேதவித்துக்களால் மங்கல நீராட்டுச் செய்யப்பட வேண்டும். பிறகு கையில் மலர்களோடு அவர்களை வலம் வந்து வெள்ளை உடையோடு தராசை அர்ச்சிக்க வேண்டும். பின் புண்ணிய காலம் வந்த பிறகு, மீண்டும் தராசை வலம் வந்து, வாள் கவசம் ஆபரணங்களோடு தராசில் ஏறி அமரவேண்டும். பிறகு தங்கத்தினால் செய்யப்பட்ட தர்மராசனின் சிலையைக் கையில் எடுத்துக்கொண்டு வாசுதேவனைப் பார்க்க வேண்டும். அப்போது இன்னொரு தராசுத் தட்டில் பொன்னை எடைக்கு எடை நிறையும் வரை வைக்க வேண்டும். அப்படி வைத்த பொன்னை அந்தணர்களுக்கு அளிக்க வேண்டும்.

1. பொன்னை வைத்துத் துலாபாரம் செய்தவன் தன் முன்னோர்களைக் கரையேற்றுகின்றான். பிறந்ததிலிருந்து செய்த பாவம் அகலுகிறது. வறுமையை அடைய மாட்டான்.
2. வெள்ளியைத் தானம் செய்தால் சுவர்க்கத்தை அடைவான். பிறகு அரசனாகப் பிறப்பான்.
3. தங்கத்தைத் திருடியவன், குஷ்டநோய் உள்ளவன் முதலியோர் தாமிரத்தைத் தானம் செய்தால் பாவத்திலிருந்து விடுபடுவர்.
4. வெண்கலத்தைத் தானம் செய்பவன் இந்திரனாவான்.
5. இரும்பைத் தானம் செய்தால் ரத்தினங்களைப் பெறுவான்.
6. ஈயத்தைத் தானம் செய்பவன் கந்தர்வனாவான்.
7. நெய்யைத் தானம் செய்பவன் ஒளியோடு நீண்ட ஆயுளையும் பெறுவான்.
8. எண்ணெயைத் தானம் செய்தால் நோயற்று சுகவாழ்வு பெறுவர்.
9. அன்னத்தைத் தானம் செய்தால் நீண்ட ஆயுளைப் பெறுவர்.

இப்படித் துலாபாரத்தைச் சிரத்தையோடு செய்பவர்கள் பலவிதமான பலன்களைப் பெறுவர் எனத் தானசாகரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

## ஏமகர்ப்பம்:

ஏமகர்ப்பம் என்னும் தானமும் பதினாறு மகாதானங்களில் ஒன்று. இரண்யகர்ப்பம் எனவும் வழங்கப்படும். இதன் மகத்துவம் மத்ஸ்ய புராணத்தில் 205ஆவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. துலாபார தானத்திற்குப் பிறகு இரண்டாவது முக்கிய தானமாக இது குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் செய்முறையாவது:

புண்ணியமான திதியில் உபவாசம் இருக்க வேண்டும். பிறகு பரமேச்வரனை ஆவாகனம் செய்ய வேண்டும். அதன் பிறகு புண்யாகவாசனம் செய்து அதிவேஷணமும் செய்ய வேண்டும். அந்தணர்களைக் கொண்டு தங்க மயமான குண்டத்தைக் கொண்டுவரச் செய்யவேண்டும். அந்தக் குண்டம் 72 அங்குல உயரமும் தங்கத் தாமரையைப் போன்ற நடுப் பகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும். அதில் மூன்று பாகம் குறைவாக நெய்யையும் பாலையும் விட்டு நிரப்ப வேண்டும். இரத்தினங்களையும் வைத்துத் தங்க நூலைக் கொண்டு சுற்ற வேண்டும். அதனருகில் தங்கத்தினாலான தண்டத்தையும் கமண்டலத்தையும் வைக்க வேண்டும். அதனை ஒரு அங்குலம் அதிகமான விரிவுடையதும் தாமரையைப் போன்ற வடிவுடையதுமான மூடியைக் கொண்டு மூட வேண்டும். முத்து

மாலையோடும் பதுமராகங்களோடும் அந்தக் குண்டத்தை வைத்து அர்ச்சிக்க வேண்டும்.

பிறகு மங்கள ஒலியோடும் வேத முழக்கத்தோடும் எல்லா மூலிகைகளும் உள்ள நீரால், தானம் செய்பவன் நீராட்டப்பட வேண்டும். வெள்ளையுடை தரித்து எல்லா அணிகலன்களையும் பூண்டு, ‘நமோ ஹிரண்யகர்பாய ஹிரண்யகவசாய’ என்று தொடங்கும் மந்திரங்களால் அர்ச்சிக்க வேண்டும். வடக்கு நோக்கி அமர்ந்து, அதில் நீரை நிரப்ப வேண்டும். இரு கைமுட்டிகளிலும் தர்மராசனையும் பிரமதேவனையும் பிடித்துத் தானம் செய்பவனின் கால்முட்டுக்களின் நடுவே தலையை வைத்து, ஐந்து சுவாசங்கள் வரை, தாயின் கர்ப்பத்தில் இருப்பது போல் இருக்க வேண்டும். பிறகு, தானம் செய்பவனுக்கு (ஹிரண்ய கர்ப்பருக்கு), கர்ப்பதானம், பும்சவனம், சீமந்தம் முதலான சடங்குகளைச் செய்ய வேண்டும். பிறகு சங்கீதம், மங்கள கோசம் முதலானவற்றால் ஆசார்யரை எழுப்ப வேண்டும். பிறகு சாதகர்மா முதலான பதினாறு சம்சுகாரங்களையும் செய்ய வேண்டும். பிறகு ஊசி முதலானவற்றை ஆச்சார்யரிடம் கொடுத்துவிட்டு, மீண்டும் மந்திரத்தைச் சொல்லியபடிச் சிறந்த அந்தணர்கள் ஆபரணங்களைப் பூண்டவர்களாய், 4 கலசங்களைக் கொண்டு அவனை நீராட்ட வேண்டும்.

பிறகு தானம் செய்பவன், தங்க சிம்மாசனத்தில் இருக்க வேண்டும். அந்தணர்கள் ‘தேவஸ்ய த்வே’ எனத் துவங்கும் மந்திரத்தினால் “இன்று புதிதாகப் பிறந்த உன்னை அபிஷேகம் செய்கின்றோம், இந்த திவ்வியமான உடலோடு நீ பலகாலம் சுகமோடு வாழ்க” என்று வாழ்த்தி அபிஷேகம் செய்ய வேண்டும். அவர்களுக்குத் தானம் செய்பவன், தங்கக் குண்டத்தை தானமாகத் தரவேண்டும். அதற்கு உபகரணங்களான மற்ற பொருட்களை ஆச்சார்யருக்குக் கொடுக்க வேண்டும். பாதுகை, குடை, சாமரம், ஆசனம், உணவு, கிராமம் அல்லது நாடு போன்ற எதில் அவர்களுக்கு விருப்பம் உண்டோ, அவற்றைத் தானமாகத் தரவேண்டும். இப்படிப் புண்ணிய தினத்தில் ஹிரண்ய கர்ப்ப தானம் செய்பவன் பிரம்மலோகத்தில் சிறப்படைவான். ஒவ்வொரு மன்வந்தரத்திலும் திக்பாலகர்களின் நகரத்தில் வசிப்பான். கோடி கல்பங்கள் வரை பிரம்மலோகத்தில் மகிழ்வான்.

கலிகாலத்தின் பாவங்களிலிருந்து நீங்கியவனாய்த் தேவலோகத்தில் தேவப் பெண்டிரால் சாமரம் வீசப்பெற்றவனாய்த் தன்னுடைய முன்னோர்கள் அனைவரையும் தனி ஒருவனாகவே கரையேற்றுவான். இவ்வாறு இரண்யகர்ப்பத்தின் பெருமையும் முறையும் விளக்கப்பட்டுள்ளது. [8]. இப்படிப் பொன்னையும் பொருளையும் ஊர்களையும், மன்னர்கள் பார்ப்பனர்களுக்குக் கொடுத்த வகையில் சோழ மன்னர்களின் பங்கு குறித்துக் கிடைத்துள்ள சில செப்பேடுகளைக் காண்போம்.

## சோழ மன்னர்களின் தானங்களும் செப்பேடுகளும்:

தமிழக வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பல சான்றுகள் உள்ளன. அவைகளில் முக்கியமான ஆதாரமாகக் கருதப்படுவது அக்காலச் செப்பேடுகளாகும். பிற்காலச் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், ஆலயங்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் அளித்த நில தானங்கள், பிற தானங்கள் பற்றி ஆலயங்களில் கல்வெட்டுகளாக செதுக்கி வைத்தது மட்டுமின்றிச் செப்பேடுகளில் எழுதியும் வைத்தார்கள்.

குறிப்பாக, பார்ப்பனர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்ட பிரம்மதேயங்கள், சதுர்வேதி மங்கலங்கள், துலாபாரங்கள், ஏமகர்ப்பங்கள், அன்னதானம் போன்ற தானங்களைப்

பற்றிய விவரங்கள் செப்பேடுகளிலே பொறிக்கப்பட்டன. நிலையான அரசாணையாக தமக்களிக்கப்பட்ட தானங்கள், காலத்திற்கும் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதாரமாக, தாங்களும் அதன் ஒரு படியினை வைத்துக் கொள்ளப் பார்ப்பனர்கள் எண்ணியதால், அவ்வாறான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பெரும்பாலும் அனைத்துச் செப்பேடுகளிலும், முதல் பகுதியாக வடமொழியில் எழுதப்பட்ட விவரங்களே தொடங்கும். அதன் பின்னரே, தமிழில் எழுதப்பட்ட செய்திகள் இருக்கும். தங்களின் முதன்மைத் தன்மையை அனைத்து வகைகளிலும் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற நிலையில், தமிழ் மன்னர்களிடம் தானம் பெறும் நிகழ்வில் கூடத் தங்கள் மொழி தான் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்துள்ளது என்பது புலப்படுகிறது. தவிர, அன்றைய நாளில் வந்து புகுந்த அத்தனை பார்ப்பனர்களுக்கும் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனாலேயே தங்களுக்குத் தெரிந்த மொழியில் முதலில் எழுதி வைத்துக்கொள்ள நினைத்து, அதனைச் செயல்படுத்தியுள்ளனர். ஆனால் இதில் சிறப்பு என்னவென்றால், செப்பேடுகளைச் செதுக்கியவர்கள் பார்ப்பனரல்லாத ‘பேராசார்யன்’ என்ற பட்டத்தைப் பெற்ற தொழில்முறைத் தச்சர்கள் என்று அறியமுடிகிறது, இதுவரை கிடைக்கப்பெற்ற சோழர்காலச் செப்பேடுகள், இப்படியாகக் கீழ்க்கண்டபடி வரிசை படுத்தப்பட்டுள்ளன.

| எண் | செப்பேடு | உரிய மன்னன் | காலம் (கி.பி) | தான விவரம் |
|---|---|---|---|---|
| 1 | உதயேந்திரம் செப்பேடு | முதலாம் பராந்தகன் | 922 | பிரம்மதேயம் |
| 2 | வேலஞ்சேரிச் செப்பேடு | முதலாம் பராந்தகன் | 932 | பிரம்மதேயம் |
| 3 | அன்பில் செப்பேடு | சுந்தர சோழன் | 961 | பிரம்மதேயம் |
| 4 | திருச்செங்கோடு செப்பேடு-1 | கொல்லி மழவன் | 962 | வரி விலக்கு |
| 5 | திருச்செங்கோடு செப்பேடு-2 | சுந்தர சோழன் | 967 | தேவதானம் |
| 6 | சென்னை அருங்காட்சியகச் செப்பெடு | உத்தமசோழன் | 985 | தான நிவந்தம் |
| 7 | பெரிய லெய்டன் செப்பேடு | முதலாம் இராசராசன் | 1006 | பள்ளிச்சந்தம் |
| 8 | திருவாலங்காடு செப்பேடு | முதலாம் இராசராசன் | 1018 | தேவதானம் |
| 9 | கரந்தை செப்பேடு | முதலாம் இராசேந்திரன் | 1020 | பிரம்மதேயம் |
| 10 | திருக்களர்ச் செப்பேடு-1 | முதலாம் இராசேந்திரன் | 1103 | தேவதானம் |
| 11 | எசாலம் செப்பேடு | முதலாம் இராசேந்திரன் | 1037 | தேவதானம் |
| 12 | திருக்களர் செப்பேடு-2 | முதலாம் இராதிராசன் | 1049 | கோயில் அந்தணர்கட்குக் கூலி |
| 13 | சாராலச் செப்பேடு | வீர ராசேந்திரன் | 1069 | பிரம்மதேயம் |
| 14 | சிறிய லெய்டன் செப்பேடு | முதலாம் குலோத்துங்கன் | 1090 | பள்ளிச்சந்த உறுதிபாடு |
| 15 | திருக்களர் செப்பேடு-3 | முதலாம் குலோத்துங்கன் | 1098 | ஆலய நிவந்தம் |
| 16 | திருக்களர் செப்பேடு-4 | இரண்டாம் இராசராசன் | 1164 | ஆலய நிவந்தம் |
| 17 | திருக்களர் செப்பேடு-5 | மூன்றாம் குலோத்துங்கன் | 1207 | ஆலய ஆபரண நிவந்தம் |

பிற்காலச் சோழ மன்னர்களில் பெரும் புகழோடு விளங்கிய மாமன்னன் இராசராசன் காலத்தில், பார்ப்பனர்களுக்கு பல இடங்களில் ஊர் தானங்கள் அளிக்கப்பட்டன. அதுபோல அவன் காலத்தில் நாகப்பட்டினத்தில் இருந்த ஒரு பௌத்த விகாரத்திற்கும் கொடை அளிக்கப்பட்டுள்ளது என்பதை அவன் மகனான முதலாம் இராசேந்திரன் காலத்திய 'ஆனைமங்கலம் செப்பேடுகள்' வழியாக அறியலாம். சில சோழ மன்னர்கள் பிற மதத்தினருக்கும் கொடைகள் அளித்தார்கள் என்றாலும் அதில் 2 வேறுபாடுகள் உண்டு. பௌத்த, சமண மதத்தாருக்கு அளிக்கப்பட்ட கொடைகள் அவர்களின் வழிபாட்டுத் தலங்களுக்கு அளிக்கப்பட்டவை. அச்சமயத் துறவிகளின் சுக வாழ்க்கைக்காக அளிக்கப்படவில்லை. ஆனால் பார்ப்பனர்களுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் யாவும் அவர்களின் தனிப்பட்ட சுகபோக வாழ்வுக்காக அளிக்கப்பட்டவை. மேலும், பௌத்த சமணத்துக்கு அளிக்கப்பட்ட சிற்சில தானங்களை விடவும், பார்ப்பனர்களுக்கு அளிக்கப்பட்ட பெருந்தானங்களே எண்ணிக்கையில் மிக மிகுதியானவை. உயர்ந்த இடத்தில் அமர்ந்து கொண்ட பார்ப்பனர்களுக்கு இம் மன்னர்கள் அடிபணிந்து இருந்தவர்கள் என்பதற்கு மேற்சொன்ன செப்பேடுகளிலிருந்து சிலவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளை இங்கே தருவது பொருத்தமாகும்.

### வேலஞ்சேரிச் செப்பேடு - கி.பி. 932 - முதலாம் பராந்தகனின் 25 வது ஆட்சியாண்டு:

திருத்தணியை அடுத்த வேலஞ்சேரி என்னும் கிராமத்தில் 1977ஆம் ஆண்டில் பள்ளிக்கூடச் சிறுவர்கள் விளையாடும்போது கண்டெடுத்த செப்பேடுகள் என்பதால் வேலஞ்சேரி செப்பேடு என்ற பெயர் இடப்பட்டது.

கி.பி.932இல் பராந்தக சோழன், தனது 25வது ஆட்சியாண்டின் 193ஆம் நாளில் திருத்தணிக்கு அருகில் உள்ள தலைவேடு, மாயன்காடு, கிழகல் என்ற 3 கிராமங்களை மேல் இருஞ்சேரு கிராமத்துடன் இணைத்து, அக்கிராமத்தில் வாழ்ந்து வந்த சாம வேதத்திலும் மற்ற வேதங்களிலும் வல்லவர்களாயிருந்த பிராமணர்களுக்கு, பிரம்மவன்விருத்தாதிராசன் என்பவன் விண்ணப்பித்துக் கொண்டதன் பேரில் பிரம்மதேயமாகக் கொடுத்ததை இச்செப்பேடு தெரிவிக்கிறது. இல்லத்தூர், திருத்தணி ஆகிய ஊர்களைச் சேர்ந்த நாட்டார்களை இப்பணிக்காக நியமித்து, அவர்கள் கிராமங்களை இணைத்து இம்மூன்று கிராமங்களுக்கும் ஆண்டுதோறும் பங்காவார வரியாகக் கிடைக்கும் 3000 காடி நெல்லையும், 9 கழஞ்சு பொன்னையும் மேல்இருஞ்சேரு கிராமத்துப் பிராமணர்களுக்கு வழங்க வேண்டும் என்று அரசனின் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அன்பில் செப்பேடு — கி.பி. 961 - சுந்தரசோழனின் 4-ஆம் ஆட்சியாண்டு:

சுந்தர சோழனின் நான்காவது ஆட்சியாண்டில், திருவழுந்தூர் நாட்டிலுள்ள ஊர்களில் ஒன்றான நன்முழான்குடிக்குள் அமைந்துள்ள நிலப்பகுதியில், 10 வேலி நிலம் மழநாட்டைச் சேர்ந்த அன்பில் என்ற அகரத்தில் வாழ்ந்து வரும் காசிப கோத்திரத்தைச் சேர்ந்தவரும் சைமினி சூத்திரத்துக்கு உரியவருமான நாராயண அநிருத்தனான பிரம்மாதிராசனுக்கு ஏகபோகமாகத் தரப்பட்டது. நன்முழான்குடியிலிருந்த 28 வேலிக்குள், 10 வேலி நிலத்தைப் பெண்யானையைக் கொண்டு வலம் வரச்செய்து அடையாளம் காட்டப்பட்டது. அந்த 10 வேலி நிலமும் கருணாகரமங்கலம் என்ற பெயரால் அநிருத்த

பிரம்மாராயருக்கு ஏகபோகமாகத் தரப்பட்டது. எல்லைகளின் அடையாளமாகக் கற்களும் கள்ளிச்செடியும் நடப்பட்டன. நிலத்தைப் பெற்றவருக்குண்டான சிறப்புரிமைகளும் செப்பேட்டில் விளக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. பல அடுக்குகள் கொண்ட வீடு கட்டலாம்
2. குளமும் கிணறும் தோண்டலாம்
3. தமனகை, இருவேலி போன்றவற்றை வளர்க்கலாம்
4. தேவையான நீருக்கு ஏற்ப வாய்க்கால்கள் வெட்டலாம்
5. அவற்றில் எவரும் குற்றேற்றமோ அல்லது கூரைநீரோ வைக்கக்கூடாது
6. சென்னீர் வெட்டி நிலப் பாசனம் செய்யலாம் முதலானவை அவை.

இந்நிலத்தை ஏகபோகமாக உருவாக்கி அதற்குக் கருணாகரமங்கலம் என்னும் பெயர் கொடுத்து முன்பு குடியிருந்தோரை வெளியேற்றி நிலநிவந்தம் தரப்பட்டது என்பது செப்பேட்டில் சொல்லப்பட்டுள்ள செய்தியாகும்.

## பெரிய லெய்டன் செப்பேடு — கி.பி.1005 — முதலாம் இராசராசனின் 21ஆம் ஆட்சியாண்டு:

இராசராசன் காலத்திய இச்செப்பேடு, நெதர்லாந்து நாட்டில் உள்ள லெய்டன் பல்கலைக்கழகத்தின் அருங்காட்சியகத்தில் உள்ளது. வடமொழி, தமிழ் இரண்டிலும் எழுதப்பட்ட இச்செப்பேடு, 21 ஏடுகளைக் கொண்டுள்ளது.

கோனேரின்மை கொண்டான் என்றழைக்கப்பட்ட மாமன்னன் இராசராசன், தனது இருபத்தொன்றாம் ஆட்சியாண்டின் 192ஆம் நாள், தஞ்சாவூர் புறம்பாடியில் இராசாச்சர்ய மாளிகையில் தெற்கில் உள்ள மண்டபத்தில் வீற்றிருக்கும் போது, சத்ரியசிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்தில் உள்ள நாட்டார்க்கும், பிரம்மதேயக் கிழவர்க்கும் தேவதானம், பள்ளிச் சந்தம், கணிமுற்றூட்டு, வெட்டிப்பேறு முதலான ஊருடையார்க்கும் நகரங்களிலார்க்கும் ஆணை பிறப்பித்தான். சிறீவிசய அரசனான சூளாமணிபன்மன், சத்ரியசிகாமணி வளநாட்டில் பட்டணக்கூற்றத்தில் நாகப்பட்டினத்தில் எடுப்பிக்கும் சூளாமணிபன்ம விகாரப் பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்திற்கு, சத்ரியசிகாமணி வளநாட்டில் பட்டினக்கூற்றத்தில் உள்ள ஆனை மங்கலத்தைப் பள்ளிச்சந்தமாக வழங்க அந்த ஆணை வெளியிடப்பட்டது.

இதன்படிக் கொடையாக அளிக்கப்பட்ட ஊரின் எல்லைக்குட்பட்ட அனைத்து இடங்களும், பள்ளிச்சந்த உரிமையாளருக்கு உரிமையானதோடு, அங்கு அரசனால் பெறப்பட்ட வரிகள் அனைத்தையும் பள்ளிச்சந்தமே வசூலித்து அனுபவித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது. இச் செப்பேட்டின் வடமொழிப் பகுதியில், இராசராசன் மரணமடைந்த பின், அவன் மகன் மதுராந்தகன் இச்செப்பேட்டை வெளியிட்டான் என்ற குறிப்பு உள்ளது. மேலும் செப்பேட்டுஇலச்சினையில்இச்செப்பேட்டை இராசேந்திரனின் ஆணை என்றுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதால் இச்செப்பேடு இராசேந்திரன் காலத்தில் வெளியிடப்பட்டது என்றும் கொள்ளவேண்டியுள்ளது.

திருவாலங்காட்டுச் செப்பேடு – முதலாம் இராசேந்திரனின் 6ஆம் ஆட்சியாண்டு:

இராசேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டில் அளிக்கப்பட்ட தானம் குறித்த இச் செப்பேட்டில் 31 ஏடுகள் உள்ளன. அதில்

முதல் 10 ஏடுகள் வடமொழியிலும், மீதமுள்ள 21 ஏடுகள் தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. இச்செப்பேட்டுச் செய்தியின்படி செயங்கொண்ட சோழ மண்டலத்தில் இருந்த மேன்மலைப் பழையனூர் நாட்டில் உள்ள சிங்களாந்தகச் சதுர்வேதி மங்கலத்திற்கு உட்பட்ட பிரம்மதேயமான பழையனூரைத் தனது 6ஆம் ஆட்சியாண்டின் 88-ஆம் நாள் வெள்ளான் வகை கிராமமாக மாற்றி, அதன் வருவாயைத் திருவாலங்காட்டு மகாதேவருக்கு அளிக்கும் வண்ணம் தேவதானமாக மாற்றி அளித்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வழக்கம்போல் சோழ மன்னர்களின் ஆதிகால பரம்பரையினை விவரித்துக் கூறப்பட்டுள்ளது. இத் தேவதான மாற்றத்திற்கான ஒப்புதலை முதலாம் இராசேந்திரன் முடிகண்ட சோழபுரத்தில் (பழையாறை) உள்ள கருமாளிகை மதுராந்தக தேவனில் தெற்கில் மறைவிடத்தில் இருக்கும் போது ஆணையிட்டான் என்று தமிழ்ப் பகுதி ஏடுகளில் கூறப்பட்டுள்ளது.

கரந்தை தமிழ்ச்சங்கச் செப்பேடு – முதலாம் இராசேந்திரனின் 8ஆம் ஆட்சியாண்டு:

இச்செப்பேடு தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் உள்ள புத்தூர் என்ற கிராமத்தின் திரு. சேவு பாண்டியன் என்பவரின் வயலில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டுப் பின்னர் 1950இல் தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் வைக்கப்பட்டது.

57 ஏடுகள் கொண்ட இச்செப்பேடு, நராக்கண் மாராயன் சனாதனனான இராசேந்திர சோழ பிரம்மாதிராசனின் விண்ணப்பத்தால், முதலாம் இராசேந்திரனின் 8-ஆம் ஆட்சியாண்டின் 107ஆவது நாளில், பெரும்பெற்றப் புலியூரில் விட்ட வீட்டின் உள்ளில் மாளிகையில், இராசேந்திர சோழன் பிரம்மாதிராசன் எனும் கீழை மண்டபத்தில் உணவுண்ணும் வேளையில், 50 சிற்றூர்களை ஒருங்கிணைத்து ஒரு பெரிய அக்ரஹாரத்தை உருவாக்கி, அதற்கு அரசனின் தாயான திரிபுவன மகாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்று பெயரிடப்பட்டு, அந்த அக்ரஹாரத்திற்கு உரிய நிலங்கள் 1083 அந்தணர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்ட செய்தியை விரிவாகக் குறிப்பிடுகிறது. இச்செப்பேட்டில் கொடையளிக்கப்பட்ட நிலங்கள், அதனை அளவீடு செய்தவர்கள், தானம் பெற்ற பார்ப்பனர்கள் போன்ற விரிவான விவரங்கள் கொண்டுள்ள சிறப்பினைப் பெற்றது.

அனேகமாக, இதுவரை அறியப்பட்ட, பார்ப்பனர்களுக்கான நிலக்கொடை அளிக்கப்பட்டவைகளில் மிகக்கூடுதலான எண்ணிக்கையில், 1083 பார்ப்பனர்களுக்கு வழங்கப்பட்ட கொடையான இதுவே பெரியகொடையாக இருக்க வேண்டும். கொடையாக அளிக்கப்பட்ட வீரசோழ வளநாட்டைச் சேர்ந்த 41 ஊர்கள், வெண்ணிக்கூற்றத்தைச் சேர்ந்த 11 ஊர்கள் என, 52 வெள்ளான் ஊர்களில் (தற்போதைய பாபநாசம், மன்னார்குடி வட்டத்தில் உள்ளன) சில கோயில்கள், நந்தவனங்கள், கம்மாளர், பறைச்சேரிகள், சுடுகாடுகளை நீக்கிப் பிரம்மதேயமாக மாற்றி, இவைகட்குரிய ஊர்ப் பெயர்களையும், பல்வேறு பட்ட வரிகளையும் நீக்கி, திரிபுவன மகாதேவிச்சதுர்வேதிமங்கலம் என்று பெயரிடப்பட்டது. 3135 வேலி நில அளவு கொண்ட புதிதாக அமைக்கப்பட்ட சதுர்வேதி மங்கலத்திற்குரிய வரியாக 51050 கலம் நெல்லும் 32.5 காசு மீன்பாட்டமும், 65 அக்கம் முதலியவை வரையறுக்கப்பட்டது. இந்த ஊர்களில் ஏற்கனவே வசித்து வந்த பார்ப்பனர்கள் தங்கள் நிலத்திற்கு முன்பிருந்தபடித் தாங்களே இறையிறுக்குமாறும் ஆணையிடப்பட்டது.

தானம்பெற்றமைக்குவிலக்காகநாடாட்சியும், ஊராட்சியும், வட்டிநாழியும், பிதாநாழியும், கண்ணாலக்கானமும், வண்ணாரப்பாறையும், சுசக்காணமும், நீர்க்கூலியும், இழப்பூச்சியும்,

இலைக்கூலமும், தறிப்புடவையும், தரகும், தட்டாரப் பாட்டமும், இடைப்பாட்டமும், ஆட்டுக்கிறையும், நல்லாவும், நல்நெருதும், நாடுகாவலும், ஊடுபோக்கும், விற்பிடியும், வாலமஞ்சாடியும், உல்கும், ஓடக்கூலியும், மன்றுப்பாடும், மாவிறையும், தீயெறியும், கூத்திக்காலும் உள்ளிட்டு அரசன் வசூலித்து அனுபவித்துக் கொள்ளத் தக்கவாகிய எல்லாம் அரசன் கொள்ளாமல் பார்ப்பனருக்கு உரியது ஆக்கினான்.

இந்த வரி வகைகளில் வட்டிநாழி என்பது 6 குறுணி அல்லது 48 தானிய அளவு கொண்ட பெரிய கூடை என்பதும், இதன் மூலம் தானியங்கள் வரியாக வசூலிக்கப்பட்டது என்பதும் அறியலாம். அதுபோல பிதாநாழி என்பது விளக்கு எரிக்க வீட்டுக்கு 1 நாழியளவு என்ற வகையில் நெய்யினை வரியாகப் பெறுவது என்று கூறப்படுகிறது. இலைக்கூடம் என்பது கடைகளுக்கும், வெற்றிலை விற்பனைக்கும், தானிய வகைகளுக்குமான வரியாகும். ஆட்டுக்கிறை என்பது ஆடு மேய்க்கும் இடையர்களுக்குரிய வரியாகும். ஊடுபோக்கு என்பது அறுவடைக்குத் தயாராக உள்ள தானியங்கள் மற்றும் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தானியங்களுக்குரிய வரி. மன்றுப்பாடு என்பது நீதிமன்றம் தொடர்பான தண்டனைகட்குரிய வரியாகும். தன்னிச்சையாக வீதிகளில் திரியும் கால்நடைகளைப் பிடித்து அவற்றின் உரிமையாளர்களுக்கு விதிக்கப்படும் வரி மாவிறையாகும். இப்படி அரசன் தானம் கொடுத்த ஊர்களின் பொதுமக்களிடமிருந்து பல்வேறு வகைகளில் பெற்றுவந்த வரிகள் யாவும், தானம் பெற்றுக்கொண்ட பார்ப்பனர்களுக்கு உரியதாக ஆக்கப்பட்டது என்பதும் இதில் குறிப்பிடத்தக்கது.

தானம் பெற்ற 1083 பார்ப்பனர்களும் எந்த கோத்திரம், சூத்திரத்தைச் சேர்ந்தவர்கள், எந்த ஊரைச் சேர்ந்தவர்கள், மற்றும் அவர்களின் மரபுப் பெயர்கள் மற்றும் பெயர்கள் பற்றிய விரிவான விவரங்கள் செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப்படியாக பார்க்கையில் 1083 பேரில் 775 பேர் ஆந்திரப் பகுதிகளிலிருந்து சோழ மன்னர்களின் ஆட்சி காலத்தில் தமிழகம் புகுந்தவர்கள் என்பது அறியப்படுகிறது.

## எசாலம் செப்பேடு— கி.பி.1037 - முதலாம் இராசேந்திரனின் 25ஆம் ஆட்சியாண்டு:

கி.பி.1036-37ஆம் ஆண்டில் முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட செப்பேடு இதுவாகும். விழுப்புரம் செஞ்சி சாலையில் நேமூர் என்ற ஊருக்குக் கிழக்கில் உள்ள கிராமம் எசாலம். இது பண்டைக் காலத்தில் எய்தார் என்றழைக்கப்பட்டது. இது இராசராச சதுர்வேதி மங்கலத்தின் எல்லையில் இருந்தது. திருராமீஸ்வரம் என்றழைக்கப்படும் சிவன் ஆலயம் இங்குள்ளது. இக்கோயிலில் கடந்த 1987இல் இச்செப்பேடு கண்டெடுக்கப்பட்டது. 15 ஏடுகள் கொண்ட இச்செப்பேட்டில் சேர, சோழ, பாண்டியர்களின் சின்னங்களான வில், புலி, மீன் சின்னங்களோடு சளுக்கியர்களின் சின்னமான பன்றியின் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. திருராமீஸ்வரமுடையார் ஆலயத்தை எழுப்பிட வேண்டும் என்று மதுராந்தகனின் (இராசேந்திரனின்) குருவான சர்வசிவ பண்டிதர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அதற்கான நிலக்கொடை அளித்த விவரம் இச்செப்பேட்டில் உள்ளது. நன்னாடு, ஏரப்பாக்கம் என்ற இரு ஊர்களை ஒன்றாக்கி விக்ரமசோழ நல்லூர் என்று பெயரிட்டு இறையிலியாக அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சர்வசிவ பண்டித ஆச்சாரியான் என்பவர் சிவபெருமானுக்கு இணையான

வலிமை கொண்டவர் என்றும், அவர் தாம் வசித்த அக்ரஹாரத்திற்கு அருகில் உள்ளதும் குணங்கள் நிறைந்த மக்கள் வாழுமிடமுமான எய்தார் எனுமிடத்தில், இராமேசுவரம் என்ற பெயரில் ஒரு கோயிலை எழுப்பித்தார் என்றும், அந்தக் கோயிலில் வந்து குடிகொள்ள சிவபெருமான் விரும்பினார் என்றும், சிவகுரு சொன்னதால் காஞ்சியில் தங்கியிருந்து ஒரு நாள் குளியலறையில் நின்று, தான் வென்ற செல்வத்தைச் சிறந்த அந்தணர்களுக்கு வழங்கிய அவன் (மதுராந்தகன் எனும் இராசேந்திரன்), 24ஆவது ஆட்சியாண்டில் இராமேசுவரத்தில் குடிகொண்ட தேவருக்கு அர்ச்சனைக்காக நிலத்தை வழங்கினான் என்று செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் கூறுப்பட்டுள்ளது. இராசேந்திரனின் 25வது ஆட்சியாண்டின் பத்தாம் நாள், செயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து நகரமான காஞ்சிபுரத்தில், வீட்டிலிருந்து இந்த ஆணையினை வெளியிட்டதைக் குறிக்கும் “ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயில் கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து நம் வீட்டின் உள்ளால் நாம்குளிக்குமிடத்து தானம் செய்யாவிருந்து..” என்ற வரிகள் மூலம் இராசேந்திரன் தன் அரண்மனையில் குளிக்கும் இடத்திலிருந்து ஆணை பிறப்பித்தான் என்று தமிழ்ப்பகுதி ஏடுகளில் சொல்லப்பட்டுள்ளது.

இச்செப்பேடு குறித்த தகவல்களின் இறுதியில், சர்வசிவ பண்டிதர் குறித்துச் சொல்லப்படும் செய்திகள் முக்கியமானவையாகும். அவைகளின் சுருக்கமாக ஒரு வரலாற்றாரின் கூற்றைக் காண்போம்:

“எசாலம் செப்பேட்டில் சர்வசிவ பண்டிதர் என்பவர் குறிப்பிடப்படுகிறார். இவர் சர்வசிவாரியர் எனப்படுகிறார். இச்செப்பேடு, இவரை இராசேந்திர சோழனின் குருநாதர் என்று குறிப்பிடுகிறது. இச்செப்பேட்டுக்கு ஆறு ஆண்டுகள் முன்னதான தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு ஒன்றில் “உடையார் இராசராச ஈச்சுவரமுடையார் கோயில் ஆச்சார்யபோகம் நம் உடையார் சர்வசிவபண்டித சர்வாச்சார்யார்” எனக் குறிப்பிடுகிறது. உடையார் என்ற சொல்லடை இறைவனுக்கு முன்னொட்டாக அமைவது. எனவே குருநாதனை இறைவனுக்குச் சமமாக உடையார் என்று சாசனம் குறிக்கிறது. தஞ்சை பெரிய கோயிலில் பூசனை உரிமைக்கான கொடை இங்கே ‘சைவாச்சார்ய போகம்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரதத் திருநாட்டில் தமிழகத்தில் மட்டும் ஆகம வழிபாடு வழக்கத்தில் உள்ளதாகும். இராசேந்திர சோழன் காலத்தில் பாரதத்தின் பிற பகுதிகளில் சோழர்கள் எடுப்பித்த சிவாலயங்களில் ஆகம வழிபாடு மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் என்ற செய்தியைத் தஞ்சைக் கல்வெட்டு வாயிலாக ஊகிக்க இயல்கிறது. தஞ்சை பெரிய கோயில் ஆச்சார்யபோகம் சர்வசிவபண்டிதருக்கும், அவருடைய சீடர்களுக்கும், சீடரின் சீடர்களுக்கும் இராசேந்திரன் தந்த நிவந்தச் செய்திகளைக் கல்வெட்டு காட்டுகிறது. சீடரும் சீடர்களின் சீடருமாக இருந்தோர் ஆர்யதேசம், மத்யதேசம், இலாடதேசம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர். அவருள் தகுதி உடையவர்களுக்குத் தஞ்சை பெரியகோயில் கருவூலத்தில் ஆடவல்லான் எனும் மரக்காலால், ஆண்டொன்றுக்கு 2000 கல நெல் தர இராசேந்திரன் உத்தரவு பிறப்பித்ததனைத் தஞ்சைக் கல்வெட்டுக் காட்டுகிறது.” [9]

## சாராலச் செப்பேடு - கி.பி.1069 - வீரராசேந்திரனின் 7ஆம் ஆட்சியாண்டு:

சாராலம் என்கின்ற சிறு கிராமம் ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், புங்கனூர்

வட்டத்தில் உள்ளது. இங்கு வசித்த ஒருவரின் தோட்டத்திலிருந்து 1935ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற இச்செப்பேடு தற்போது கொல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியகத்தில் உள்ளது. 7 ஏடுகளைக் கொண்ட இச்செப்பேட்டுத் தொகுதியில் வழக்கம்போல முதலில் காணப்படும் வடமொழி ஏடுகள் பாடல்களாகப் பாடப்பட்டவை. அவற்றில் மன்னர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது.

வீரராசேந்திரனின் 7ஆம் ஆட்சியாண்டில் செயங்கொண்டசோழ மண்டலத்தில் எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரம் திருவேகம்பமுடையார் கோயிலில், இராசராசன் என்ற பெயர் கொண்ட திருவோலக்க மண்டபத்தில் அவன் இருந்தபோது, உத்தராயண சங்கராந்தியை முன்னிட்டு ஆத்ரேய கோத்திரத்தையும், போதாயன சூத்திரத்தையும் ரிசிகேசபட்ட சோமயாசியார் வருக்கத்தையும் சேர்ந்த அந்தணர்கள், சுரோத்திரிய கிரமவித்தன், முந்தைய கிரமவித்தன் மற்றும் பல்லய கிரமவித்தன் என்னும் மூவருக்கும் சேருமாறு மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தைத் தானமளித்தான். இவ்வூர் புலிநாட்டில் இரட்டப்பாடிகொண்ட சோழமண்டலத்தில் உள்ளது. அந்த தானம் ஆகவமல்லனை வெற்றி கொண்ட பிறகு அளிக்கப்பட்டது.

## திருஇந்தளூர் செப்பேடு

தமிழ்நாட்டில் இறுதியாகக் கிடைத்த சோழர் காலத்தின் மிகப்பெரிய செப்பேடு இதுவாகும். மயிலாடுதுறையை அடுத்த கழுக்காணிமுட்டம் என்ற கிராமத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தின் சீரமைவுக்காக கடந்த 20-05-2010 அன்று குழிகள் தோண்டியபோது கிடைத்த இச்செப்பேடு, முதலாம் இராசாதிராசன் (கி.பி.1018-1054) மற்றும் இரண்டாம் இராசேந்திரன் (கி.பி.1052-1063) காலத்துச் செப்பேடாகும். 85 எண்ணிக்கை ஏடுகளைக் கொண்ட 150 கிலோ எடையுள்ள இச்செப்பேடு இதுவரை கிடைக்கப் பெற்றவைகளில் மிகப் பெரியதாகும்.

இம் மன்னர்கள், சாளுக்கிய மன்னனைக் கல்யாணபுரம் என்ற இடத்தில் வெற்றி கண்டதற்காக திருஇந்தளூர் பகுதியின் பல கிராமங்களையும் அதன் நிலங்களையும் ஒருங்கிணைத்து 'சோழகுல நாராயண சதுர்வேதி மங்கலம்' என்ற பெயரிட்டு 730 பார்ப்பனர்களுக்குத் தானம் அளித்த செய்தியை விரிவாகக் கூறுகிறது.

இக்கொடையைத் துவக்கிய முதலாம் இராசாதிராசன், தனது 35வது ஆட்சியாண்டின் 40வது நாளில், பழையாறையில் இருந்த அவனது அரண்மனையிலிருந்து 130 பார்ப்பனர்களுக்குத் தானமாக அளித்தான். பின் தனது 35வது ஆட்சியாண்டின் 100வது நாளில், கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையில் முடிகொண்டசோழன் மாளிகையில் ஆடைமாற்றிக் கொண்டிருந்த போது, பாண்டிய நாட்டில் சிற்றரசனாக இருந்த தன் உறவினர் விக்ரம சோழ பாண்டியன் என்பான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்த தானத்தை முறைப்படி இறையிலியாக்க ஆணை பிறப்பித்தான். அதன்பின் ஆட்சிக்கு வந்த இரண்டாம் இராசேந்திரன், தனது 5வது ஆட்சியாண்டின்69வது நாளில் மேலே கூறப்பட்ட தானத்திற்கு உரிய கிராமங்களை அடுத்திருந்த மேலும் 32 ஊர்களைச் சேர்த்துக் கூடுதலாக 730 பார்ப்பனர்களுக்குத் தானமளித்தான். இந்த தானத்தை அளிக்க கங்கைகொண்ட சோழபுரம் அரண்மனையில் அமைந்த சோழசேகரனன் மாளிகையில் குளிக்கும் நேரத்தில் ஆணையிட்டான் என்று செப்பேடு கூறுகிறது.

பார்ப்பனர்களுக்கு அளிக்கப்பட்ட இச்சதுர்வேதி மங்கலங்கள் அவர்களின்

ஏகபோக ஆட்சிக்கு உட்பட்டு, அப்பகுதி நிலங்களிலிருந்த மக்களை எல்லாம் வெளியேற்றி, அவர்களுக்கு ஊருக்கு வெளியே இடமளித்து, அவர்களை விவசாயக் கூலிகளாக்கி, நிலங்களின் மூலம் வரும் அனைத்து வரிகளையும் பெற்று அனுபவிக்கும் உரிமை யாவும் பார்ப்பனர்களுக்கு அளிக்கப்பட்டது.

இதுபோன்று சோழ மன்னர்கள், தம் ஆட்சிக் காலத்தில் பெரும்பாலும் பார்ப்பனர்களுக்கு மட்டும் அளித்த தானம் குறித்தே செப்பேட்டு ஆவணங்கள் கூறுகின்றன. போர்த்திறன், ஆட்சித்திறன் போன்ற பலவற்றில் அறிவும், முதிர்ச்சியும் பெற்றிருந்தவர்களாகவும், வீரம் செறிந்தவர்களாகவும் இருந்தாலும், அன்றைய அரசர்கள் பார்ப்பனர்கள் விஷயத்தில் அவர்களை மிக உயர்வாகக் கருதி அவர்கள் சொற்படியும், விருப்பப்படியும் தலையாட்டிப் படுத்துப் போனார்கள் என்பதே ஆதாரங்களின் அடிப்படையில் உண்மையாகிறது. திரும்பத் திரும்ப யோசிக்கும் போது இதற்குக் காரணம் தான் என்ன? என்று கண்டறியலாம்.

மக்கள் நலனையும், தன் நாட்டு வளத்தையும் பெருக்குவதில் எந்த அளவுக்கு அக்கறை காட்டினார்களோ, அந்த அளவுக்குத் தன் சொந்த ஆசைகளிலும் பெரும் அக்கறை செலுத்தியவர்களாகவே அன்றைய மன்னர்களில் பெரும்பாலோர் இருந்துள்ளனர். காதலும் வீரமும் தமிழர்களின் பண்பாட்டோடு ஒன்றிப் பிறந்தது என்று சொல்வதற்கிணங்க, அன்றைய மன்னர்கள் வீரத்தில் சிறந்திருந்தது போலக் காதல் களியாட்டங்களிலும் வரையற்று இருந்திருந்தனர். எந்த மன்னனும் ஒரு மனைவியோடு வாழ்ந்ததாக வரலாறில்லை. சுகபோக வாழ்வில் திளைத்திருந்த மன்னர்களின் வாழ்வு பல மனைவியர்களோடு மட்டும் முடிந்து விடவில்லை. பல நங்கையர்கள் அரசனின் அந்தபுரத்தை அலங்கரித்திருந்தனர்.

ஆலயங்களில் பணிபுரிந்து வந்த தேவதாசிகள், அங்கிருந்த பார்ப்பனர்களுக்கு எப்படி அடிமைகளாக இருந்தனரோ அதுபோல, அரசனின் அந்தபுரத்தில் அலங்கரித்த ராஜதாசிப் பெண்கள், ராஜகுருக்களாக இருந்த பார்ப்பனர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்திருக்க வேண்டும். அவர்களின் உதவியால் அரசன் அந்தப்புரத்தில் மங்கையர்களோடு களிப்புற்றிருக்கும் வேளையிலும், இம்மங்கையர்சூழக்குளியலில் ஈடுபட்டிருக்கும் வேளையிலும், தமக்குச் சாதகமாகப் பலனளிக்கக்கூடிய பலவற்றை, குறிப்பாக நிலக்கொடைகளை வாய்மொழி ஆணைகளாகப் பெற்றுப் பின்னர் அதனை உறுதி செய்துகொண்டிருக்க வேண்டும். இதற்கு அந்தப்புரத்துப் பெண்களைத் தமக்குச் சாதகமாக செயல்படவும் வைத்திருக்க வேண்டும் என்று கருதவேண்டியுள்ளது.

ஏற்கனவே பார்த்த செப்பேட்டுச் செய்திகளில் முதலாம் இராசேந்திரன் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதும், குளியலறையில் இருக்கும் போதும் பார்ப்பனர்களுக்கு நிலத் தானங்களை அளிக்க வாய்மொழி ஆணைகளைப் பிறப்பித்தான் என்று கண்டோம். அதுபோலவே திருஇந்தளூர் செப்பேடு மன்னர்கள் இருவரும் குளித்துக் கொண்டிருக்கும் போதும், ஆடைமாற்றிக் கொண்டிருக்கும் போதும் தானமளித்துள்ளனர் என்றும் கண்டோம்.

அரசவையில் இருந்து, நிதி அமைச்சர்களோடு கலந்தாலோசித்து முடிவு செய்து ஆணை பிறப்பிக்காத சோழ மன்னர்கள், தாம் குளித்துக் கொண்டிருக்கும் போதும், ஆடை மாற்றிக் கொண்டிருக்கும் போதும், சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதும், மக்கள்சார்ந்த எந்தச் செயலையும் செய்வதற்கு அவசரம் காட்டி ஆணை பிறப்பித்ததாக இதுவரை ஆதாரங்கள் கிடைக்காத நிலையில், மக்களின் உரிமைகளாக

இருந்த கணக்கற்ற விளைநிலங்களை எல்லாம் பிடுங்கிக் கொண்டதோடு அன்றி, அவ்வூர்களில் உரிமை உடையோராய் இருந்த குடிகளை நீக்கிவிட்டுப் பார்ப்பனர்களுக்கும், ஆலயங்களுக்கும் தானமாக அளிக்க ஆணை பிறப்பித்தார்கள் என்றால் அதன் பொருள் தான் என்ன? மன்னர்களின் இந்த தன்னிச்சையான, அவசரமான அடிமைத்தன ஆணைகளால் அடித்தட்டு மக்கள் அடைந்த அளவில்லாத் துன்பங்கள் நினைத்துப் பார்க்க முடியாத கொடுமை அல்லவா?

இச்செப்பேடுகளின் வழியாகத் தமிழ் மக்களின் உழைப்பால் வளம் கொழிக்கும் பூமியாக விளங்கிய பல ஆயிரம் வேலி விளைநிலங்கள், அவைகளைக் கொண்டிருந்த ஊர்கள், அவ்வூர்களின் பிற வளங்கள் யாவும், எந்த உழைப்பையும் தராமல் எளிதில் பெற்றுக் கொண்டு, 'வேல்' கொண்டு போர் புரிந்த வீர மன்னர்களையெல்லாம், தர்ப்பைப் 'புல்' கொண்டு எளிதில் மண்டியிடச் செய்திருந்த போக்கே வெளிப்படுகிறது. இப் போக்கிற்கு அன்றைய பிற்காலச் சோழ மன்னர்கள் அனைவருமே ஒருவருக்கொருவர் சளைக்காமல் ஆட்பட்டிருந்தனர் என்பதை இச்செப்பேடுகள் பறைசாற்றுகின்றன என்பதும் மறுக்க முடியாத ஒன்று.

## அடிக்குறிப்புகள்:

1. டாக்டர் கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், பக்கம் 318-319
2. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை: ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, 27-38
3. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், ஐம்பெருங்காப்பியங்கள் மூலமும் உரையும் - பக்கம் 243
4. டாக்டர் மா. இராசமாணிக்கனார், `தமிழக ஆட்சி' பக்கம் - 23, 24
5. தமிழ்நாடு தொல்லியல்துறை கல்வெட்டு ஆண்டறிக்கை - 'நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள்' (பக்கம்-61)
6. மேலது, (பக்கம் 67)
7. மேலது, (பக்கம் 212)
8. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு - 'சோழர் செப்பேடுகள்' - பக்கம் 220-223
9. தஞ்சாவூர், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு - புலவர் வே. மகாதேவன் - 'சோழர் செப்பேடுகள்' - பக்கம் 927

## ஆசிரியர் குறிப்பு:

ஞான. வள்ளுவன் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி, எம்.ஏ மற்றும் மருத்துவமனை மேலாண்மையில் முதுகலை பட்டயப் படிப்பினைப் பயின்றவர். தமிழ்நாடு அரசு மருத்துவத்துறையில் நிருவாக அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மாநிலப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் துணைத்தலைவராக உள்ளார். இவரின் நூல்களாவன: 1. பெரியார்-95, 2. தமிழர் வாழ்வில் சாதியும் மதமும் அன்றும் இன்றும், 3. திராவிட இயக்கமும் எங்கள் ஊரும், 4. இசைவேளாளர், 5. ராஜநாயகம் (வரலாற்றுப் புதினம்), 6. ஆச்சாரம் (சமூகப் புதினம்), 7. வரலாற்றில் வென்ற அவர் தாம் பெரியார்.